செ.வெ.எண்.22 நாள்.08.11.2017.

திருநெல்வேலி, பாளையங்கோட்டை பெல் மைதானத்தில் நடைபெறவுள்ள பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா அரங்கம் அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டார்.

--------

திருநெல்வேலி, பாளையங்கோட்டை பெல் மைதானத்தில் நடைபெறவுள்ள பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா அரங்கம் அமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.11.2017) நேரில் சென்று பார்வையிட்டார்.

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவிற்கு மேடை அமைக்கும் பணிகள், பயனாளிகளை அமர வைக்க ஒதுக்கப்பட்டுள்ள இடம், பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம், மேடைக்கு வரும் பயனாளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடம், முக்கிய பிரமுகர்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் அரங்கு அமைக்கும் அனைத்துப் பகுதிகளுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சென்று பார்வையிட்டார்.

தொடர்ந்து, பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு புகைப்படக் கண்காட்சி வைக்கப்படும் இடம், அரசுத் துறை அரங்குகள் அமைக்கப்படும் இடம் உள்ளிட்ட பகுதிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். விழாவிற்கு வரும் பல்வேறு வாகனங்களை நிறுத்துவதற்கு செய்துள்ள ஏற்பாடுகள் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் மாநகர காவல் துணை ஆணையர் திரு.சுகுணா சிங்,இ.கா.ப., ஆகியோர் அலுவலர்களுடன் ஆலோசித்தனர். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பொதுப்பணித் துறை அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடம் அரங்கு அமைக்கும் பணிகளை சிறப்பாகவும், விரைவாகவும் முடிக்க வேண்டுமென உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன், மாநகர நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், உதவி ஆணையர் திரு.வசந்தராஜன், மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் திரு.பாஸ்கர், உதவி பொறியாளர் திரு.லெனின், சிறுபான்மையினர் நல வாரிய தலைவர் திரு.கபேரியல் ராஜன், நெசவாளர் கூட்டுறவு சங்கத் தலைவர் திரு.ஆறுமுகம், முக்கிய பிரமுகர் திரு.செந்தில் ஆறுமுகம் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.